**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – சென்னை மாநிலக் கல்லூரி – செவித் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம். மற்றும் பி.சி.ஏ. பட்டப் படிப்பு வகுப்புகள் பயிற்றுவிக்கும் ஒப்பந்த விரிவுரையாளர்களின் மதிப்பூதியத்தை உயர்கல்வித் துறையில் வழங்குவதைப்போல ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 44** | **நாள்: 14.11.2017**
**ஹேவிளம்பி – ஐப்பசி, 28**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண் 58, உயர் கல்வித் (ஜி1)த் துறை, நாள் 02.03.2016.
2. அரசாணை (1டி) எண் 2, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 18.01.2017.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 2972/சி.ப./2016, நாள் 13.02.2017.

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் விதி எண் 110ன் கீழ் 19.02.2012 அன்று அறிவித்த அறிவிப்பினை அமல்படுத்தும் வகையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்லூரிகளில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் ஊதிய மானியத்தை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மேலே, பத்தி–1ல் உள்ள அரசாணையின் அடிப்படையில் சென்னை மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு, பி.காம். மற்றும் பி.சி.ஏ. பட்டப் படிப்பு பயிற்றுவிக்கும் மூன்று ஒப்பந்த விரிவுரையாளர்களுக்கு தொகுப்பூதியத்தினை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கினால், இத்திட்டத்திற்கென அரசுக்கு கீழ்க்கண்டவாறு கூடுதலாக ரூ.1.80 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு தேவைப்படும் என தெரிவித்துள்ளார்:–

| வ. எண் | பாடப் பிரிவு | பணியாளர் விவரம் மற்றும் ஊதிய விவரம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | பி.சி.ஏ. | 2 விரிவுரையாளர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) ரூ.5000 x 2 x 12 மாதங்கள் | ரூ.1,20,000/– |
| 2 | தமிழ் | 1 விரிவுரையாளர் (ஒப்பந்த அடிப்படையில்) ரூ.5000 x 1 x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| | | **மொத்தம்** | **ரூ.1,80,000/–** |

[த.பி.பா.]

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை மாநிலக் கல்லூரியில் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம். மற்றும் பி.சி.ஏ. வகுப்புகள் நடத்தும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும் வகையிலும், செவித் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் தொடர்ந்து பயனடையும் வகையிலும், 2016–2017ஆம் ஆண்டிற்கு மேற்காண் திட்டத்தின் கீழ் ரூ.4,57,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு மற்றும் திட்டத் தொடராணை பெறப்பட்டதுடன், ஊதிய மானியத்தை ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கிட கூடுதலாக தேவைப்படும் ரூ.1.80 இலட்சத்திற்கு அனுமதி ஆணை வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கோரியுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, சென்னை மாநிலக் கல்லூரியில் செவித் திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு பி.காம். பி.சி.ஏ. பட்டப்படிப்பு பயிற்றுவிக்கும் மூன்று ஒப்பந்த விரிவுரையாளர்களுக்கான தொகுப்பூதியத்தினை ரூ.10,000/– லிருந்து ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி–4ல் உயர்த்தி வழங்கப்பட்ட தொகுப்பூதியத்திற்கான பணப்பயன் இவ்வரசாணை வெளியிடும் நாள் முதல் வழங்கப்பட வேண்டும். மேலும், மேற்படி தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 – சமூக நலன்–101 – மாற்றுத் திறனாளிகள் நலன்–மாநில செலவினங்கள் – CJ – காது கேளாதவர்களுக்கு பட்டப் படிப்பு–33 – தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல்–04 – ஒப்பந்த ஊதியம்.

(த.தொ.கு.2235–02–101–CJ–3344)”

7. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல்சாா்பற்ற எண் 56321/நிதி(சந)/2017, நாள் 10.11.2017–ல் பெறப்பட்ட இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
மாநிலக் கணக்காயர் (A&E), சென்னை–18.

**நகல்:**

மாண்புமிகு அமைச்சரின் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதன்மைத் தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்